பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன்

சிறுவினா

1.எம்.ஜி.ஆரின் இளமைப்பருவம் குறித்து எழுதுக.

- இலங்கையில் உள்ள கண்டியில் 17. 1. 1917 இல் பிறந்தார்.
- பெற்றோர் : கோபாலன், சத்தியபாமா. எம்.ஜி.ஆர் குழந்தையாக இருக்கும்போதே தந்தையை இழந்தார்.
- தாயாருடன் தமிழ்நாட்டில் கும்பகோணம் பகுதியில் குடியேறினார்.
- குடும்ப வறுமை காரணமாக எம்.ஜி.ஆரும் அவரது அண்ணனும் படிப்பைத் தொடர முடியவில்லை. இளம் வயதிலேயே நாடகத்துறையில் இணைந்தார்.

2.'பொன்மனச்செம்மல் என்று எம்.ஜி.ஆர் அழைக்கப்படுவதற்கான சான்று ஒன்று தருக.

எம்.ஜி.ஆர் ஒரு முறை படப்பிடிப்பிற்காக காஷ்மீருக்குச் சென்றிருந்தார். இந்திய படை வீரர் நலச்சங்கத்தினர் சங்க விழாவிற்கு எம்.ஜி.ஆரை வருகை தர கேட்டுக் கொண்டனர். அச்சங்கத்திற்கு நன்கொடைதர எம்.ஜி.ஆர் விரும்பினார். ஆனால், அவரிடம் பணம் இல்லை. அங்குத் தங்கியிருந்த தமிழ்நாட்டுத் தொழிலதிபர் ஒருவரிடம் பெருந்தொகையைக் கடனாகப் பெற்று நன்கொடை கொடுத்தார். சென்னை திரும்பியதும் முதல் வேலையாக அந்தத் தொகையைத் திருப்பிக் கொடுத்தார்.

இவ்வாறு பிறர் வியக்கத்தக்க வகையில் தம் செல்வத்தை வாரி வழங்கியதால் அவரைப் பொன்மனச்செம்மல் என்று மக்கள் அழைக்கின்றனர்.

3. தமிழக முதலமைச்சர்களின் பெயர்களைப் பட்டியலிடுக.

ஏ. சுப்பராயலு

பனகல் ராஜா

பி. சுப்பராயன்

பி.முனுசுவாமி நாயுடு

ராமகிருஷ்ண ரங்காராவ்

பி.டி. இராஜன்

கூர்மா வெங்கட ரெட்டி நாயிடு

சி. இராஜகோபாலாச்சாரி

த.பிரகாசம்

ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்

பூ.ச. குமாரசுவாமிராஜா

கே. காமராஜ்

எம். பக்தவத்சலம்

சி. என். அண்ணாதுரை

இரா. நெடுஞ்செழியன்

மு. கருணாநிதி

எம்.ஜி.ஆர்

ஜானகி இராமச்சந்திரன்

ஜெ.ஜெயலலிதா

ஓ.பன்னீர் செல்வம்

எடப்பாடி கே. பழனிச்சாமி

மு. க. ஸ்டாலின்

4. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்கள் பற்றி எழுதுக.

- ஏழைகளுக்கான வீட்டுவசதித் திட்டம்.
- ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டம்.
- தாய் சேய் நல இல்லங்கள்.
- பற்பொடி வழங்கும் திட்டம்.
- உழவர்களின் கடன் தள்ளுபடி,
- ஆதரவற்ற மகளிருக்குத் திருமண உதவித் திட்டம்
- முதியோர் உதவித்தொகை வழங்கும் திட்டம் முதலிய எண்ணற்ற திட்டங்களை ஏழைகளுக்காகக் கொண்டு வந்தார்.

5.பள்ளிக் குழந்தைகளுக்குக் காலணி வழங்கும் திட்டத்துக்கு அடிப்படையாக அமைந்த நிகழ்வை எழுதுக.

எம்.ஜி.ஆரும் அவரது மனைவியும் ஒரு முறை வெளியூரிலிருந்து சென்னைக்கு வந்து கொண்டிருந்தனர். அப்போது மூதாட்டி ஒருவரும், பத்து வயதுச் சிறுமி ஒருத்தியும் காலில் காலணி இல்லாமல் தலையில் புல் கட்டுகளைச் சுமந்தவாறு சென்று கொண்டிருந்தனர். சாலையின் சூடு தாங்காமல் மரநிழலில் நிற்பதும், ஓடுவதுமாக இருந்தனர். உடனே எம்.ஜி.ஆர் தமது மனைவியாரின் காலணியையும் உறவினப் பெண்ணின் காலணியையும் அவர்களுக்குக் கொடுத்துப் பணம் கொடுத்தார். இந்த நிகழ்ச்சி அவரது மனதில்

ஆழமாகப் பதிந்தது. அதனால், பின்னர் பள்ளிக்குழந்தைகளுக்குக் காலணிகள் வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தினார்.

6.தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?

தந்தைப் பெரியார் உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தங்கள் சிலவற்றை நடைமுறைப்படுத்தி தமிழ் எழுத்து முறையை எளிமைப்படுத்தினார். மதுரையில் ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டைச் சிறப்பாக நடத்தினார். தஞ்சையில் ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை நிறுவினார்.